Chapter XX*III Code of Criminal Procedure)*

| | | | |
|---|---|---|---|
| *IN THE COURT OF`* | I ADDITIONAL DISTRICT COURT TIRUNELVELI | | |
| Calendar | | SC.No.97/2023 | |
| Miscellaneous | | | |
| Preliminary Register | | | |
| Sessions | | | |
| Deposition of Witness for | | Prosecution | P.W.5 |
| | | Defence | |
| Name | | திரு.பொன் அரசு | |
| Father's Name | : | திரு.பாண்டியராஜ் | |
| Village | : | என்.ஜி.ஓ காலனி | |
| Taluk | : | பாளையங்கோட்டை | |
| Calling | : | அரசு தரப்பு சாட்சி(கேள்விப்பட்ட சாட்சி) | |
| Age | : | 40 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 21st day of July 2026.

(எதிரிகள் ஆஜர்.)

<u>முதல் விசாரணை</u> :–

நான் தற்போது என்.ஜி.ஓ காலனியில் குடியிருந்து வருகிறேன். நான் மாருதி ஷோருமில் வேலை பார்க்கிறேன். சாட்சி முத்துராமலிங்கம் என்பவரை தெரியாது. சாட்சி கொம்பையா, முருகேசன், சரவணன் ஆகியோரை தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. இறந்துபோன சுப்பிரமணியன் என்பவரை தெரியும். அவர் எப்படி இறந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. சுப்பிரமணியத்தை அவருடைய நண்பர்கள்

கொம்பையா, முத்துராமலிங்கம், முருகேசன் ஆகியோர் அரசுமருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு வந்தார்கள். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனால் அவர் இறந்துவிட்டார். இவ்வழக்கு சம்மந்தமாக எனக்குத் வேறு எதுவும் தெரியாது. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

(அரசு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். ஆவணங்களை பரிசீலனை செய்த பிறகு அனுமதி வழங்கப்பட்டது)

<u>குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)</u>

என்னை போலிசார் விசாரித்த போது கடந்த 22.05.2022ம் தேதி இரவு 12.30 மணிக்கு சாட்சி கொம்பையா எனக்கு போன் செய்து சுப்பிரமணியன் மயக்கமாகிவிட்டார் என்று சொல்லியதால் நான் அவரை ஜி.ஹெச்க்கு அழைத்து வா என்று சொல்லிவிட்டு நான் அங்கு சென்றேன். அங்கு பாலாஜியும், சரவணன், அவரது தம்பி ஆகியோர் வந்தார்கள். கொம்பையா சுப்பிரமணியத்தை உட்காரை வைத்து முருகேசன் பிடித்து கொண்டு வந்தார். அவர் மயக்கமாக இருந்ததால் அவரை அவசர சிகிச்சை பிரிவில் படுக்க வைத்துவிட்டு வந்தோம். பின்னர் வெங்கடேஷ் அட்மிஷன் போட்டுவிட்டு வந்தார். மேற்படி சுப்பிரமணியத்திற்கு கையில் காயங்கள் இருந்ததால் அவரது போனை எடுத்து அவரது அப்பாவிற்கும், அண்ணானிற்கும் தகவல் சொன்னோம்என்றும் 22.05.2022ம் தேதி இரவு 1.30 மணிக்கு அவர் இறந்துவிட்டதாக சொன்னதால் போலிசாருக்கு தகவல் சொல்லி

விசாரித்தபோது மேற்படி சாட்சிகள் சி.எஸ்.ஐ சர்ர்ச்க்கு சொந்தமாக இடத்தில் மதுஅருந்திக்கொண்டிருந்தபோது அங்கு வந்த சுப்பிரமணியத்துக்கும், எதிரிகளுக்கும் பிரச்சனை ஏற்பட்டபோது எதிரிகள் சுப்பிரமணிணத்தை காலால் மிதித்து பின்தலையில் அடித்தும், யாராவது கிட்டவந்தால் உங்களையும் அடித்துவிடுவோம் என்று மிரட்டியதால் அவரை பின்னர் தான் மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தார்கள் என்றும் ஆனாலும் அவர் இறந்துவிட்டார் என்றும் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

மறுவிசாரணை இல்லை.

Chapter XX*III Code of Criminal Procedure)*

| *IN THE COURT OF`* | I ADDITIONAL DISTRICT COURT TIRUNELVELI | | |
|---|---|---|---|
| Calendar | | SC.No.97/2023 | |
| Miscellaneous | | | |
| Preliminary Register | | | |
| Sessions | | | |
| Deposition of Witness for | | Prosecution | P.W.6 |
| | | Defence | |
| Name | | திரு.பால்துரை | |
| Father's Name | : | திரு.முத்துராமலிங்கம் | |
| Village | : | ரெட்டியார்பட்டி | |
| Taluk | : | பாளையங்கோட்டை | |
| Calling | : | அரசு தரப்பு சாட்சி(கேள்விப்பட்ட சாட்சி) | |
| Age | : | 36 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 21st day of July 2026.

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.)

<u>முதல் விசாரணை</u> :–

நான் தற்போது ரெட்டியார்பட்டியில் குடியிருந்து வருகிறேன். இறந்துபோன சுப்பிரமணியன் எனது தம்பி. அ.சா.1 எனது அப்பா. அ.சா.2, அ.சா.3, அ.சா.4 ஆகியோர்கள் எனது தம்பியின் நண்பர்கள். கடந்த 21.05.2024 ம் தேதி எனது தம்பி நண்பர்களை பார்க்க வெளியில் சென்றார் என்றும், ஆனால் இரவு அவர் மருத்துவமனையில் இருப்பதாக அவருடைய நண்பர்கள் போன் செய்தார்கள் என்றும், பின்னர்

இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள் என்றும், அந்த சமயத்தில் எனது அப்பா மருத்துவமனைக்கு சென்றார். பின்னர் பெருமாள்புரம் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். ஆவணங்களை பரிசீலனை செய்த பிறகு அனுமதி வழங்கப்பட்டது)

குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)

என்னை போலிசார் விசாரித்த போது கடந்த 22.05.2022ம் தேதி இரவு 12.30 மணிக்கு சாட்சி கொம்பையா எனக்கு போன் செய்து சுப்பிரமணியன் மயங்கிவிட்டார் என்றும், ஜி.ஹெச்க்கு அழைத்து சென்று அவசர சிகிச்சை பிரிவில் சேர்த்திருப்பதாகவும் பின்னர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாகவும் எனது தம்பி போனில் இருந்து எனக்கும், எனது அப்பாவிற்கும் தகவல் சொன்னார்கள் என்றும், பின்னர் போலிசாருக்கு தகவல் சொல்லி விசாரித்தபோது மேற்படி சாட்சிகள் சி.எஸ்.ஐ சர்ர்ச்க்கு சொந்தமாக இடத்தில் மதுஅருந்திக்கொண்டிருந்தபோது அங்கு வந்த சுப்பிரமணியத்துக்கும், எதிரிகளுக்கும் பிரச்சனை ஏற்பட்டபோது எதிரிகள் சுப்பிரமணிணத்தை காலால் மிதித்து பின்தலையில் அடித்தும், யாராவது கிட்டவந்தால் உங்களையும் அடித்துவிடுவோம் என்று மிரட்டியதால் அவரை பின்னர் தான் மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தார்கள் என்றும் ஆனாலும் அவர் இறந்துவிட்டார் என்றும் வாக்குமூலம்

கொடுத்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

மறுவிசாரணை இல்லை.

Chapter XX*III Code of Criminal Procedure)*

| | | | |
|---|---|---|---|
| *IN THE COURT OF`* | I ADDITIONAL DISTRICT COURT TIRUNELVELI | | |
| Calendar | | SC.No.97/2023 | |
| Miscellaneous | | | |
| Preliminary Register | | | |
| Sessions | | | |
| Deposition of Witness for | | Prosecution | P.W.7 |
| | | Defence | |
| Name | | திரு.வடிவேல் | |
| Father's Name | : | திரு.முத்துராமலிங்கம் | |
| Village | : | ரெட்டியார்பட்டி | |
| Taluk | : | பாளையங்கோட்டை | |
| Calling | : | அரசு தரப்பு சாட்சி(கேள்விப்பட்ட சாட்சி) | |
| Age | : | 33 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 21st day of July 2026.

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.)

<u>முதல் விசாரணை</u> :–

நான் தற்போது ரெட்டியார்பட்டியில் குடியிருந்து வருகிறேன். இறந்துபோன சுப்பிரமணியன் எனது தம்பி. அ.சா.1 எனது அப்பா. அ.சா.2, அ.சா.3, அ.சா.4 ஆகியோர்கள் எனது தம்பியின் நண்பர்கள். கடந்த 20.05.2024 ம் தேதி நான் கோயமுத்தூருக்கு வேலைக்கு சென்றுவிட்டு 21 ம் தேதி திரும்பி வந்துகொண்டிருந்தபோது எனது தம்பியின் நண்பர்கள் இரவில் எனது தம்பிக்கு ஆக்சிடண்ட் ஆகிவிட்டதாக சொல்லி போன்

செய்தார்கள். நான் அவர்களிடம் எனது அப்பாவிற்கு போன் செய்து தகவல் சொல்லுமாறு சொன்னேன். எனது அப்பா சென்று பார்த்துவிட்டு எனது தம்பி இறந்துவிட்டதாக தகவல் சொன்னார். இது சம்மந்தமாக போலிசார் விசாரித்தபோது எதிரிகள் சிவநம்பி, பொன்பாண்டி, செல்வம், செந்தில்முருகன் எனது தம்பியை தாக்கி கொன்றுவிட்டதாக கேள்விப்பட்டேன். 9.30 மணிக்கு எனது தம்பி சென்றபோது முருகேசனும், கொம்பையாவும் மதுஅருந்திக்கொண்டிருந்தை எனது தம்பி புகைப்படம் எடுத்துள்ளார். மேற்படி புகைப்படம் எனது தம்பி செல்போன் காவல்நிலையத்தில் இருந்து கொடுக்கப்பட்டபிறகு அதை பார்த்ததில் தெரிந்து கொண்டேன். மேற்படி எனது தம்பியின் செல்போனில் இருந்த புகைப்படங்கள் அனைத்து அழிக்கப்பட்டுயிருந்தது. அதை நான் Recovery software மூலமாக தான் எடுத்தேன். மேற்படி புகைப்படத்தை குறியீடு செய்வதற்கு எதிரிகள் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டதால் செல்போன் இன்று நீதிமன்றத்திற்கு கொண்டுவரப்படவில்லை என்பதாலும் மேற்படி புகைப்படம் குறியீடு செய்யப்படவில்லை. மேற்படி எனது தம்பியின் நண்பர்கள் விபத்து என்று சொன்னார்கள். போலிசார் விசாரணையின்போது எதிரிகள் அடித்துக்கொன்றதாக தெரியவந்தது. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :-

நான் கோயமுத்தூரில் வேலை முடித்துவிட்டு 22.05.2022ம் தேதி காலை 10.30 மணிக்கு வந்தேன். நான் பெருமாள்புரம் காவல்நிலையம் செல்லும்போது 11.30 மணிக்கு

இருக்கும். அங்கு எனது அப்பா மட்டும் இருந்தார். எனது அம்மா மருத்துவமனையில் இருந்தார்கள். காவல்நிலையத்தில் யாரை பார்த்தேன் என்றால் எஸ்.ஐ திரு.அருணாச்சலம் அவர்களையும், காவல் ஆய்வாளர் திருமதி.ஜெயலட்சுமி அவர்களையும் பார்த்தேன். அவர்களிடம் தம்பிக்கு என்ன நடந்தது என்று கேட்டேன். அவர்கள் தான் எனது தம்பிக்கு முதலில் விபத்து என்று அவரது நண்பர்கள் மருத்துவமனையில் சேர்த்தாக சொன்னார்கள். பின்னர் விசாரணையில் அவரது நண்பர்கள் தான் அடித்துக்கொன்றதாக சொன்னார்கள். மேற்படி விவரத்தை அவர்கள் சொல்லும்போது பகல் 12.00 மணி இருக்கும் என்றால் சரிதான். அப்போது தான் எனக்கு விவரம் தெரியவந்தது என்றால் சரிதான். காவல்நிலையத்தில் காவல் அதிகாரிகளை பார்த்து முதல்விசாரணையில் சொன்ன புகைப்படத்தை கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. என் கைவசம் இருப்பதாக சொன்னேன். அவர்கள் இனி நீதிமன்றத்தில் தான் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று சொல்லிவிட்டார்கள். நான் வைத்துள்ள புகைப்படத்திற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லைஎன்றால்சரியல்ல. நான் முதல்விசாரணையில் கேள்விப்பட்டதாக சொல்லும் எந்த விவரங்களும் உண்மையல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.